**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 148/2021**
**நாள் 24/10/2025 வெள்ளிக்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – பழனி (DW1) | த/பெயர் – குப்பன் |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**குறுக்கு விசாரணை–**

1. ஏழுமலையும், முனுசாமியும் சகோதரர்களா என்றால் ஆமாம். ஏழுமலை என் மனைவியின் சகோதரர் ஆவார். மேற்படி ஏழுமலை மற்றும் முனுசாமியிடம் தரை வாடகைக்கு மனை வாடகைக்கு எடுத்திருந்தேனா என்றால் ஆமாம், எடுத்து ஆட்களை வைத்து நிறுவனம் நடத்தினேன். மாதம் ரூபாய் 800/– தரை வாடகை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி இடத்திற்கு எனக்கு வாடகை தாரர் என்ற உரிமை மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். 3 phase மின் இனைப்பு பெறுவதற்கு ரூபாய் 3,00,000/– செலவு செய்ததாக என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் அது கட்டிடம் கட்ட மற்றும் மின் இணைப்பு பெற செலவு செய்தேன்.

2. பொதுவாக கட்டிடம் என்றால் காலம், பீம் சுவர்கள் அமைத்து கட்டப்படுவது என்றால் சரிதான், பா வடிவில் சுவர் எழுப்பி காலம் அமைத்து சீட் போட்டு வழக்கு சொத்தில் கட்டிடம் அமைத்தேன். மேற்படி நான் கட்டிடம் கட்டியதற்கும், மின் இணைப்பு வாங்கியதற்கும் ஆவணம் ரசீது ஆகியவை உள்ளதா என்றால் உள்ளது.

ஆனால், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வாதியின் கணவர் கொரானா காலகட்டத்தில் வழக்கு சொத்தில் இருந்து என்னை வெளிறேற்றுமாறு கவரப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் ஆமாம். அந்த புகாரின் மீது முழுமையான விசாரணை நடைபெற வில்லை என்றால் சரியல்ல. உரிமையியல் பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுமாறு கூறிவிட்டார்கள். அதற்கான ஆதார் ஏதேனும் தாக்கல்செய்துள்ளேனா என்றால் வாய்மொழியாக தான் கூறி அனுப்பினார்கள்.

3. என் பிரமாண வாக்குமூலத்தில் 5ம் பத்தியில் கைலாசம் என்பவருக்கு ஏழுமலை மற்றும் முனுசாமி வழக்கு சொத்தை அடமானம் மட்டும் எழுதி கொடுத்து வட்டி பணம் மட்டும் பெற்றதாக கூறியதாக சொல்லியுள்ளேன் என்றும் அதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் பிரமாண வாக்குமூலத்தில் 6ம் பத்தியில் சொல்லப்பட்ட விவரங்கள் என்னுடைய பதிலுரையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கான வில்லங்கத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தை பொருத்தவரையில் நான் வாடகைதாரர் தான், உரிமைதாரர் அல்ல என்றால் சரிதான். 22 வருடங்களாக வாடகைதாரர் என்ற பெயரில் அனுபவத்தில் இருந்து வருகிறேன்.

4. கைலாசம், ஏழுமலை மற்றும் முனுசாமிக்கு 2011ம் ஆண்டு ஜூன் மாதம் வரை வட்டி பணம் செலுத்திவந்தார் என சொல்லியுள்ளேன் என்றும் அதற்கு ஆதாரமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, கைலாசம் சொல்லிதான் அந்த விவரம் எனக்கு தெரியும்.

பி.சா ஆ 5 வழக்கறிஞர் அறிவிப்பு, பி.சா ஆ 6 அஞ்சல் ஒப்புதல் அட்டை, பி.சா ஆ 7 வாதி அனுப்பிய பதில் அறிவிப்பு, பி.சா ஆ 8 கைலாசம் மற்றும் வசந்தா அனுப்பிய பதில் அறிவிப்பு ஆகிய ஆவணங்கள் என் கைக்கு எப்படி வந்தது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அறிவிப்பு அனுப்பிய வழக்கறிஞர் பெயர் காலமேகம் என்றால் சரிதான். என் வழக்கறிஞரும் அவர் தான் என்றால் சரிதான். என்னுடைய வழக்கறிஞர் என் அனுமதி இல்லாமல் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்துள்ளாரா என்றால் ஆமாம்.

5. பி.சா ஆ 9 மற்றும் பி.சா ஆ 10 ஆவணங்கள் பதிவு செய்யப்படாத ஆவணங்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் வழக்கு நிலுவையில் இருக்கும் போது ஏற்ப்படுத்திய ஆவணங்கள் என்றால் சரிதான். அந்த ஆவணங்களில் கண்டுள்ள சங்கதிகளை நிரூபிக்க கடமைபட்டுள்ளேன் என்றால் சரிதான். வாதியிடம் வழக்கு சொத்திற்கு வாய்மொழியாக வாடகை ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல, பிரியா என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. அவ்வாறு எனில் கவரப்பேட்டை காவல்நிலையத்தில் நடந்ததாக சொல்லும் விசாரணை பொய்யா என்றால் இல்லை, ராஜா மட்டும் தான் அந்த விசாரணைக்கு வந்திருந்தார்.

6. நான் வழக்கு சொத்தின் உாிமையை பற்றி பிரச்சனை எழுப்பியதால் வாதி வழக்கு சொத்து அவருக்கு உாிமையானது என விளம்புகை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. முனுசாமி மற்றும் ஏழுமலையை கைலாசம் என்பவர் ஏமாற்றிவிட்டார், முனுசாமி இறந்துவிட்டார் மற்றும் ஏழுமலைக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது அதனால் அவர்களால் வழக்கு தாக்கல் செய்ய

இயலவில்லை, வாதி என் மீது வழக்கு தாக்கல் செய்துவிட்டார். முனுசாமி 2024ம் ஆண்டு தான் இறந்தார் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் இருந்த பிரச்சனை சம்மந்தமாகதான் உடல்நிலை பாதிக்கப்பட்டு இறந்துவிட்டார் அதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதிக்கு எதிராக அவதூராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியப்படி பரிகாரம் அவருக்கு வழங்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**